# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தல் சட்டம்

---

*[1990, திசெம்பர் மாதம் 06 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

---

*1990 ஆம் ஆண்டு திசெம்பர் 07 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 1.80* *தபாற் செலவு : ரூபா 1.55*

# 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தல் சட்டம்

[1990, திசெம்பர் மாதம் 06 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]
ச.வ.—ஒ. 29/90

**பொதுவில் கைத்தொழில்களையும் குறிப்பாக ஏற்றுமதிக் கைத்தொழில்களையும் மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமாக ஊக்குவிப்புக்களையும், உள்ளமைப்பையும் ஏற்பாடுசெய்யும் மற்றும் அதற்குப் பொருத்தமான சூழலை உருவாக்கும் நோக்குடன், கைத்தொழில்மயப் படுத்தல் ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும், கைத்தொழில் மதியுரைப் பேரவையொன்றை அமைப்பதற்கும், பிராந்திய கைத்தொழில் சேவைக் குழுக்களை அமைப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக—சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், இச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு தவிர்ந்த ஏனைய ஏற்பாடுகள், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும், அத்துடன் 24 ஆம் பிரிவு 1991 யூலை 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். *சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.*

## பாகம் I

### கைத்தொழில் பொறுப்புமுயற்சிகளைப் பதிவுசெய்தல்

2. (1) நியமித்த தேதியன்று அல்லது அதன்முன்னர் தொடங்கிய கைத்தொழில் பொறுப்புமுயற்சியொன்றைக் கொண்டுநடாத்தும் ஒவ்வோர் ஆளும், அத்தகைய பொறுப்புமுயற்சி கொண்டுநடாத்தப்படும் இடத்தை அல்லது அமைவிடத்தை, நியமித்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், பதிவாளரிடம் பதிவுசெய்துகொள்ளுதல் வேண்டும். *கைத்தொழில் பொறுப்பு முயற்சிகளைப் பதிவு செய்தல்.*

(2) நியமித்த தேதிக்குப் பின்னர் தொடங்கப்படும் கைத்தொழில் பொறுப்புமுயற்சியொன்றைக் கொண்டுநடாத்தும் ஒவ்வோர் ஆளும், அத்தகைய பொறுப்புமுயற்சி கொண்டுநடாத்தப்படும் இடத்தை அல்லது அமைவிடத்தை, அத்தகைய கைத்தொழில் பொறுப்புமுயற்சி தொடங்கப்பட்டு மூன்று மாதங்களினுள் பதிவாளரிடம் பதிவுசெய்துகொள்ளுதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான இடப்பரப்பில் உள்ள தொழில்முயற்சியொன்றுக்கு அல்லது உரிமம்பெற்ற தொழில்முயற்சியொன்றுக்கு இப்பிரிவில் உள்ளது எதுவும் ஏற்புடையதாதல் ஆகாது.

2— ம 010688—1,165 (90/09)

**கைத்தொழில் பொறுப்பு முயற்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.**

3. (1) இரண்டாம் பிரிவின்கீழ் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்விண்ணப்பம் பின்வருவன உள்ளிட்ட விதித்துரைக்கப்பட்ட விபரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும், அவையாவன :—

(அ) கைத்தொழில் பொறுப்புமுயற்சியின் சொந்தக்காரர்களின் பெயரும், முகவரியும்;

(ஆ) கைத்தொழில் பொறுப்புமுயற்சி கொண்டுநடாத்தப்படும் இடம் அல்லது அமைவிடம்;

(இ) அத்தகைய கைத்தொழில் பொறுப்புமுயற்சியில் உற்பத்திசெய்யப்படும் கைத்தொழில் விளைபொருட்கள்;

(ஈ) அத்தகைய கைத்தொழில் பொறுப்புமுயற்சியில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை; அத்துடன்

(உ) அத்தகைய கைத்தொழில் பொறுப்புமுயற்சியின் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் காணி, கட்டிடங்கள், கட்டமைப்புகள் ஆகியவைபற்றிய அளவுக் குறிப்பீடுகள்.

(2) இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் ஒன்றின் விடயத்தில், அத்தகைய கைத்தொழில் பொறுப்புமுயற்சி கொண்டுநடாத்தப்படும் இடத்தை அல்லது அமைவிடத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றுடன், 26 ஆம் பிரிவின்கீழ் அக்கைத்தொழில் பொறுப்புமுயற்சி தொடர்பில் வழங்கப்பட்ட உரிமம் ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பதிவுச் சான்றிதழ்.**

4. (1) பதிவாளர், 3 ஆம் பிரிவின்கீழான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீதும், அத்தகைய விண்ணப்பத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட இடத்தில் அல்லது அமைவிடத்தில் கைத்தொழில் பொறுப்புமுயற்சியொன்று கொண்டுநடாத்தப்படுகின்றது எனத் திருப்தியடைந்ததன் மீதும், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அமைந்த பதிவுச் சான்றிதழ் ஒன்றை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கைத்தொழில் பொறுப்புமுயற்சியொன்று தொடர்பில் சான்றிதழொன்று வழங்கப்படுகின்றவிடத்து, அத்தகைய கைத்தொழில் பொறுப்புமுயற்சியின் சொந்தக்காரர், 3 ஆம் உட்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) விலிருந்து (உ) வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள விபரங்களையும், அத்துடன் அவ்வாண்டுக்கான அக்கைத்தொழில் பொறுப்புமுயற்சியின் மொத்த விற்பனை வரவையும் மொத்த உற்பத்தியையும் அடக்கிய ஆண்டு விபரத்திரட்டொன்றை, அடுத்துவரும் ஆண்டு மார்ச்சு முப்பத்தோராம் நாளுக்கு முன்னராகப் பதிவாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

5. (1) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக கைத்தொழிற் பொறுப்புமுயற்சியொன்றை ஆளொருவர் கொண்டுநடாத்துமிடத்து, பதிவாளர், அத்தகைய கைத்தொழில் பொறுப்புமுயற்சி எம்மாகாணத்தினுள் கொண்டுநடாத்தப்படுகின்றதோ, அம்மாகாணத்திற்கென அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ்த் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திற்கு அத்தகைய கைத்தொழில் பொறுப்புமுயற்சி கொண்டுநடாத்தப்படும் இடத்தை அல்லது அமைவிடத்தை 2 ஆம் பிரிவுக்கு இசையப் பதிவுசெய்யுமாறு அத்தகைய கைத்தொழில் பொறுப்புமுயற்சியைக் கொண்டுநடாத்தும் ஆளைத் தேவைப்படுத்தும் கட்டளையொன்றைக் கோரி விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம். மேல் நீதி மன்றம் பதிவைக் கட்டாயப் படுத்திக் கட்டளை ஆக்கலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும் அத்தகைய மேல் நீதிமன்றத்திற்கு முகவரியிடப்படும் எழுத்திலான மனுமூலம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XXIV ஆம் அத்தியாயத்தில் விதிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு இணங்க விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

6. சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அல்லது அமைவிடத்தில் கைத்தொழில் பொறுப்புமுயற்சியொன்று கொண்டுநடாத்தப்படுகின்றது என்னும் பயன்படவமைந்த, அத்துடன் அத்தகைய இடம் அல்லது அமைவிடம் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை என்னும் பயன்படவமைந்த பதிவாளரின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்று, 5 ஆம் பிரிவின்கீழ் தொடுக்கப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக ஏல்தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன், அது அதனகத்துக் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கான முதற்றோற்றச் சான்றாகவிருத்தலும் வேண்டும். சான்று.

## பாகம் II

### கைத்தொழில் மயப்படுத்தல் ஆணைக்குழு

7. (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கைத்தொழில் மயப்படுத்தல் ஆணைக்குழு என அழைக்கப்பட வேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். கைத்தொழில் மயப்படுத்தல் ஆணைக்குழு.

8. (1) ஆணைக்குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :— ஆணைக்குழுவின் அமைப்பு.

(அ) அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர்;

(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர்;

(இ) கொள்கைத் திட்டமிடல், செயற்படுத்தல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ஈ) வியாபாரம், வர்த்தகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ;

(உ) புடவைக் கைத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ;

(ஊ) சிறுகைத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ;

(எ) கமத்தொழில், பண்ணை அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ;

(ஏ) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ;

(ஐ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மாகொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட, மாகொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஒ) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தவிசாளர் ; அத்துடன்

(ஓ) கைத்தொழிற்றுறையில் பரந்த அனுபவம் கொண்டவர்களும் திறமையுள்ளவர்களுமென அமைச்சர் காணும் ஆட்களிடையேயிருந்து, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்துக்குக் குறையாதவர்களும், ஏழுக்கு மேற்படாதவர்களுமான ஆட்கள்.

(2) ஆளொருவர், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருந்தால், அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால், ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினர் ஒருவராகத் தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், சனாதிபதிக்கு முகவரியிடப்படும் கடிதம் மூலம் ஆணைக்குழுவிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

(4) சனாதிபதி, (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரை காரணம் காட்டாமலே அகற்றலாம்.

(5) மூன்றும், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் இறப்பதன், பதவி விலகலின் அல்லது அகற்றப்படுவதன் காரணமாக ஆணைக்குழுவில் வெற்றிடம் எதுவும் ஏற்படுமிடத்து. சனாதிபதி, அப்பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புதல் வேண்டும்.

(7) அத்தகைய எவரேனும் உறுப்பினர் இறப்பதன், பதவி விலகுவதன் அல்லது அகற்றப்படுவதன் காரணமாக எழுகின்ற வெற்றிடம் ஒன்றை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள், அவருக்கு முன் பதவி வகித்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(8) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரே ஆணைக்குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதலும் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் வருகை தாராதவிடத்து, அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரே அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், அத்தகைய செயலாளர் ஆகிய இருவருமே ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு வருகை தாராதவிடத்து அத்தகைய கூட்டத்திற்கு வருகை தந்துள்ள ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், (15) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக, அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கான உறுப்பினர் ஒருவரைத் தம்மிடையேயிருந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(9) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் ஆறுதல் வேண்டும்.

(10) தவிசாளர் அல்லது ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்குச் தலைமைதாங்கும் ஆள், அவரது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(11) ஆணைக்குழு குறைந்தது ஒவ்வொரு மாதத்துக்கும் ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும் என்பதுடன், அதன் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கை முறையையும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கொண்டுநடாத்தப்படுவதையும் ஒழுங்குபடுத்தலாம்.

(13) ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் இருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன், ஆணைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், ஆணைக்குழுவில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் உள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

(13) ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

(14) (1) (ஆ) என்னும் உட்பிரிவில் அல்லது (1) (இ) என்னும் உட்பிரிவில் அல்லது (1) (எ) என்னும் உட்பிரிவில் அல்லது (1) (ஏ) என்னும் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், அவரது இடத்தில் அவரது மாற்றாளாக ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கென அவரது அமைச்சின் சிரேட்ட அலுவலர் ஒருவரைப் பதவிப் பெயர் குறித்து நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய பதவிப்பெயர் குறித்த நியமனம் பற்றி ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அவர் அறிவித்தலும் வேண்டும்.

(15) பதினான்காம் உட்பிரிவின்கீழ் பதவிப்பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மாற்று உறுப்பினர் ஒருவர் ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கும் அங்கு வாக்களிக்கவும் உரிமையுடையவராதல் வேண்டும்; ஆனால் ஆணைக்குழுவின் கூட்டத்திற்கு தலைமைதாங்குவதற்கென (8) ஆம் உட்பிரிவின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவற்றவராதல் வேண்டும்.

(16) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் அவரது பதவியின் பயன் கொண்டு ஆணைக்குழுவில் பிரதிநிதியாகவிருப்பதற்கு உரித்துடைய ஒன்றுக்கு மேற்பட்ட பதவியை வகிக்குமிடத்து, அத்தகைய உறுப்பினர் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்துமூலம், ஆணைக்குழுவில் அவர் பிரதிநிதித்துவஞ் செய்யும் பதவியைக் குறித்துக் காட்டலாம் என்பதுடன், அவர் வகிக்கும் மற்றைய பதவியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு வேறோர் அலுவலரைப் பெயர்குறித்து நியமித்தலும் வேண்டும்.

(17) அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ஆணைக்குழுவின் முடிபுகளை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்புடையவராதல் வேண்டும். ஆணைக்குழு, இச்சட்டத்தினால் அதற்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியை அத்தகைய செயலாளருக்குக் கையளிக்கலாம்.

**ஆணைக்குழுவின் செயலாளர்.**

9. ஆணைக்குழுவுக்கு செயலாளரும், ஆணைக்குழுவின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு பணியாட்டொகுதியினரும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

**ஆணைக்குழுவின் பணிகளும் தத்துவங்களும்.**

10. (1) ஆணைக்குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) கைத்தொழில் மயப்படுத்தலுக்கான தோதான பெருமட்டப் பொருளாதாரக் கொள்கைகள் உட்பட, கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான கொள்கை நடவடிக்கைகள், திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனையளித்தல்;

(ஆ) கைத்தொழில் மயப்படுத்தலுக்கான முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பையும், கைத்தொழில் மேம்படுத்தலையும் உறுதிப்படுத்தல்;

(இ) கைத்தொழில் மயப்படுத்தலுக்காக நிறுவனஞ்சார் செயல்முறைமைகள் வழங்கப்படுதலை உறுதிப்படுத்தல்;

(ஈ) கைத்தொழில்சார் உள்ளமைப்புக்களையும், சேவைகளையும் வழங்குவதற்கான திட்டங்களைத் தயாரித்தல்;

(உ) கைத்தொழில்களுக்கென திட்டவட்டமான விளைபொருட்கள், மற்றும் சந்தைத் தகவல் உள்ளமைப்பொன்றை ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(ஊ) அமைச்சரினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றவாறான கைத்தொழில் பற்றிய அத்தகைய கருமங்கள் தொடர்பில் விசாரணைகளைச் செய்தலும், அமைச்சருக்கு அறிக்கைகளைச் செய்தலும்.

(2) ஆணைக்குழு, அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்யத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில், ஆணைக்குழுவானது பின்வருவனவற்றிற்கான அவசி யத்தைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:—

(அ) திறமைவாய்ந்தவையும், சர்வதேச போட்டித் திறன் வாய்ந்தவை யுமான கைத்தொழில்களின் அபிவிருத்தியையும், வளர்ச்சியை யும் ஊக்குவித்தல்;

(ஆ) பொருளாதாரத்தில் அமைப்புசார் மாற்றங்களுக்கான சீராக்க லுக்குத் துணை தந்து ஊக்குவித்தல்;

(இ) தேசியக் கொள்கை அனுமதிக்கின்றமட்டில், கைத்தொழில் ஒழுங்கு படுத்தலை ஆகக் குறைந்தளவுக்குக் குறைத்தல்.

(4) பந்தி (1) (ஊ) என்னும் பிரிவின் கீழ் ஏதேனும் விடயத்தை விசார ணைக்கு, ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதில், அமைச்சர், ஆணைக்குழு அதன் இடைக்கால மற்றும் இறுதி அறிக்கைகளை முறையே எக்காலப் பகுதிகளுக்குள் அமைச்சருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமோ அக்காலப் பகுதிகளைக் குறித்துரைக்கலாம்.

(5) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ், பின்வருவன பற்றி விசாரணைசெய்து அறிக்கையிடுமாறு ஆணைக்குழு வைத் தேவைப்படுத்தலாம்:—

(அ) ஏதேனும் கைத்தொழிலுக்கு அரசாங்கத்தினால் நிதிசார் உதவி அல்லது வேறு உதவி வழங்கப்படுதல்;

(ஆ) அரசாங்கம் ஏதேனும் கைத்தொழிலுக்கு நிதிசார் உதவியை வழங்குவதற்குள்ள அவசியம் அல்லது ஏதேனும் கைத்தொழி லுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் நிதிசார் உத வியை மீளப்பெறுவதற்கு, அதிகரிப்பதற்கு அல்லது குறைப்ப தற்கு உள்ள அவசியம்;

(இ) இலங்கைக்குள் எவையேனும் பண்டங்களை இறக்குமதி செய்வ தைத் தடுப்பதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு உள்ள அவ சியம் ; அல்லது

(ஈ) இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பண்டங் கள் மீதான தீர்வைகளை விதிப்பதற்கு, அகற்றுவதற்கு, அதிக ரிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு உள்ள அவசியம்.

11. ஆணைக்குழு, அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஆணைக்குழுவின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான வையும், விதித்துரைக்கப்பட்ட தகைமைகள் வாய்ந்த உறுப்பினர்களைக் கொண்டமைந்தனவையுமான அத்தகைய குழுக்களை நியமிக்கலாம் என்ப துடன், இச்சட்டத்தினால் அதற்கு அளிக்கப்பட்ட எவையேனும் தத்து வங்களை அல்லது குறித்தொதுக்கப்பட்டுள்ள எவையேனும் பணிகளை அத்தகைய குழுக்களுக்குக் கையளிக்கவும் செய்யலாம். குழுக்கள்.

12. ஆணைக்குழு, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டின் இறுதியிலும், அந்த ஆண்டின்போது ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட வேலை பற்றிய அறிக் கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அமைச்சர் அத்தகைய அறிக்கையை பாராளுமன்றத்தின் முன் சமர்ப் பிக்கச் செய்வித்தலும் வேண்டும். ஆண்டு அறிக்கை.

## பாகம் III

### கைத்தொழிலுக்கான மதியுரைப் பேரவை

கைத்தொழிலுக்கான மதியுரைப் பேரவை.

13. (1) (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கைத்தொழிலுக்கான மதியுரைப் பேரவை" என அழைக்கப்பட வேண்டிய பேரவையொன்று இருத்தல் வேண்டும்.

(2) பேரவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கைத்தொழில் மயப்படுத்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்;

(ஆ) கைத்தொழில் அபிவிருத்திக்கான அதன் பங்களிப்பைக் கருத்திற் கொண்டு, அமைச்சரினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு தனி அவையினாலும், சம்மேளனத்தினாலும், அல்லது கழகத்தினாலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரு உறுப்பினர்கள் ;

(இ) அமைச்சரினால் நியமிக்கப்பட்டவர்களும், கைத்தொழிலைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களுமான விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினரான ஆட்கள்;

(ஈ) கைத்தொழிற்றுறையில் பரந்த அனுபவம் வாய்ந்தவர்களும், திறமை மிக்கவர்களும் என அமைச்சர் காணும் ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்படும் பதினைந்துக்கு மேற்படாத ஆட்கள்.

பேரவையின் பணிகள்.

14. பேரவையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) கைத்தொழில் தொடர்பிலான பிரச்சினைகளையும், கைத்தொழில் அபிவிருத்திக்காக அரசாங்கத்துடனான கூட்டுக் கைத்தொழில், நிகழ்ச்சித் திட்டங்களை கலந்தாராய்வதற்கென இலங்கையில் உள்ள கைத்தொழில் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடுசெய்தல்; அத்துடன்

(ஆ) கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் பயனுறுதித் தன்மை பற்றி அமைச்சருக்கு ஆலோசனையளித்தல்.

பேரவையின் தத்துவங்கள்.

15. (1) பேரவையானது, அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறாக அல்லது அதன் இடைநேர்விளைவான அத்தகைய தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பேரவையின் கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கையாளுவதற்கான நடவடிக்கைமுறை, 13 (2) ஆம் பிரிவின் (ஆ), (இ) அத்துடன் (ஈ) ஆகிய பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம், பேரவையின் தவிசாளரைத் தேர்ந்தெடுத்தல், 13 (2) (ஆ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தனி அவைகளை, சம்மேளனங்களை அத்துடன் கழகங்களை ஏற்றங்கீகரிப்பதற்கான வழிகாட்டல்கள், அத்துடன் கைத்தொழிலைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஆட்களைத் தெரிவு செய்யும்முறை ஆகியன, விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(3) பேரவை, ஒவ்வோராண்டின் இறுதியிலும், அவ்வாண்டின்போதான அதன் செயற்பாடுகள்பற்றிய அறிக்கையொன்றைத் தயாரிப்பித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை அமைச்சருக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.

## பாகம் IV

### பிராந்திய கைத்தொழில் சேவைக்குழுக்கள்

பிராந்திய கைத்தொழில் சேவைக் குழுக்கள்

16. (1) அமைச்சர், ஒவ்வொரு மாகாணத்தினதும் பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அம்மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் நோக்கத்துக்காக, அத்தகைய மாகாணத்தினுள் பிராந்தியங்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ்த் தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு பிராந்தியத்துக்கும், பிராந்திய கைத்தொழில் சேவைக் குழு என அழைக்கப்படும் குழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய குழு, அத்தகைய பிராந்தியம் அமைந்துள்ள மாகாணத்தின் பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

பிராந்திய கைத்தொழில் சேவைக் குழுவின் பணிகள்.

17. பிராந்திய கைத்தொழில் சேவைக்குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) அமைச்சருக்கும், அத்தகைய குழு எப்பிராந்தியத்திற்கு நியமிக்கப்பட்டதோ அப்பிராந்தியம் அமைந்துள்ள மாகாணத்தின் பிரதம அமைச்சருக்கும், அத்தகைய பிராந்தியத்தில் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி பற்றி ஆலோசனை வழங்குதல்;

(ஆ) அத்தகைய பிராந்தியத்தில் கைத்தொழில் அபிவிருத்திக்கான திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் தயாரித்தல்;

(இ) தேசியக் கொள்கைகளுக்கிணங்க அத்தகைய பிராந்தியத்தில் கைத்தொழில் அபிவிருத்தியை மேம்படுத்தலும், துரிதப்படுத்தலும்;

(ஈ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, திட்டங்களுக்கு இணங்க, பிராந்தியத்தில் கைத்தொழில் அபிவிருத்திக்கு அவசியமான சேவைகளையும், வசதிகளையும் ஏற்பாடுசெய்வதை ஒருங்கிணைத்தல்;

(உ) அப்பிராந்தியத்தில் ஏதேனும் கைத்தொழில் சம்பந்தமான ஏதேனும் முதலீட்டு முடிபைச் செயற்படுத்துவதற்கு எவரேனும் முதலீட்டாளருக்கு உதவிசெய்தல்; அத்துடன்

(ஊ) அப்பிராந்தியத்திற்கு பிராந்திய கைத்தொழில் சேவை நிலையமொன்றைத் தாபித்தல்.

பிராந்திய கைத்தொழில் சேவைக் குழுவின் கூட்டமைவு.

18. பிராந்திய கைத்தொழில் சேவைக்குழுவின் கூட்டமைவும், அத்தகைய குழுவினால் அலுவல்கள் கையாளப்படுதலும் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

**கைத்தொழில் பெருந்தோட்டங்களையும், கைத்தொழில் பூங்காக்களையும் அறிவியற் பூங்காக்களையும் தாபித்தல்.**

19. கைத்தொழிற் பெருந்தோட்டங்களையும், கைத்தொழில் பூங்காக்களையும், அறிவியற் பூங்காக்களையும் வேறு குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பையும் பின்வருவன உட்பட தாபித்தலும், நிருவகித்தலும் :—

(அ) கைத்தொழில் பெருந்தோட்டங்களையும், கைத்தொழில் பூங்காக்களையும் அறிவியல் பூங்காக்களையும், குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பையும் தாபித்தற்கான விண்ணப்பங்கள், அத்தகைய பெருந்தோட்டம், பூங்கா அல்லது உள்ளமைப்பு தாபிக்கப்பட்டுள்ள அல்லது தாபிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள பிராந்தியத்திற்கு நியமிக்கப்பட்ட பிராந்திய கைத்தொழில் குழுவுக்கு அல்லது அத்தகைய குழு எதுவும் இல்லாவிடில், பதிவாளருக்குச் செய்யப்படும் முறை;

(ஆ) ஏலவேயுள்ள கைத்தொழில் பெருந் தோட்டங்களையும், கைத்தொழில் பூங்காக்களையும், அறிவியற் பூங்காகக்களையும் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் பொறுப்புமுயற்சிகளையும் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள், அத்தகைய பெருந் தோட்டம், பூங்கா அல்லது உள்ளமைப்பு தாபிக்கப்பட்டுள்ள பிராந்தியத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள பிராந்திய கைத்தொழில் குழுவுக்கு அல்லது அத்தகைய குழு எதுவும் இல்லாவிடில், பதிவாளருக்குச் செய்யப்படும் முறை;

(இ) அத்தகைய பெருந் தோட்டங்களினுள் அல்லது பூங்காக்களினுள் உள்ள கட்டிடங்களையும் வேறு கட்டமைப்புகளையும் கட்டியெழுப்பதற்கும், மாற்றியமைப்பதற்கும், அழிப்பதற்கும் ஆன அங்கீகாரம் வழங்கப்பெறுவதற்கான விண்ணப்பங்கள், அத்தகைய பெருந்தோட்டம் அல்லது பூங்கா தாபிக்கப்பட்டுள்ள பிராந்தியத்திற்கு நியமிக்கப்பட்ட பிராந்திய கைத்தொழில் குழுவுக்கு அல்லது அத்தகைய குழு எதுவும் இல்லாவிடில், பதிவாளருக்கு செய்யப்படும் முறை ; அத்துடன்

(ஈ) அத்தகைய பெருந் தோட்டங்களை, பூங்காக்களை அல்லது குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பை முகாமை செய்தல்,

விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

**அழித்தற் கட்டளை.**

20. (1) ஏதேனும் கைத்தொழில் பெருந் தோட்டம், கைத்தொழில் பூங்கா, அறிவியற் பூங்கா அல்லது குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பு 19 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரமின்றி தாபிக்கப்படுமிடத்து அல்லது தேவைப்படுத்தப்பட்ட முறைக்கு முரணாக முகாமைசெய்யப்படுமிடத்து அல்லது ஏதேனும் கட்டிடம் ஏதேனும் அத்தகைய பெருந்தோட்டத்தில் அல்லது பூங்காவில் 19 ஆம் பிரிவில் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரமின்றி நிறுவப்படுமிடத்து, பதிவாளர், அத்தகைய பெருந்தோட்டத்தை அல்லது பூங்காவை அல்லது விதித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பை அல்லது கட்டிடத்தை அழிக்கப் பணிக்கும் கட்டளையொன்றுக்கு அல்லது அத்தகைய பெருந் தோட்டம் அல்லது பூங்கா அல்லது விதித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பு அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு இசைய முகாமை செய்யப்படுத்தப்படுவதைத் தேவைப்படுத்தும் கட்டளையொன்றுக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட கட்டமைப்பு ஒன்று, விடயத்திற்கேற்ப கைத்தொழில் பெருந் தோட்டம், கைத்தொழில் பூங்கா, அறிவியற் பூங்கா, அல்லது குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் உள்ளமைப்பு என்றும், அது 19 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரமின்றி தாபிக்கப்பட்டிருக்கின்றது அல்லது அத்தகைய பெருந் தோட்டம் அல்லது பூங்கா அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு முரணாக முகாமை செய்யப்படுகின்றது அல்லது அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஒரு கட்டிடம், ஒரு கைத்தொழில் பெருந் தோட்டத்தில் கைத்தொழில் பூங்காவில், அல்லது அறிவியற் பூங்காவில் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றதுடன், அத்தகைய கட்டியெழுப்புதலானது, 19 ஆம் பிரிவினால் தேவைப்பட்ட அங்கீகாரமின்றி செய்யப்பட்டிருக்கின்றது என்றும் பயன்படவமைந்த பதிவாளரின் கைப்பட வழங்கப்படும் சான்றிதழொன்று, இப்பிரிவின்கீழ் தொடுக்கப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக ஏற்தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன், இதனகத்துக் கூறப்பட்ட நிகழ்வுகள் பற்றிய முதற்றோற்றச் சான்றாகவிருத்தலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான இடப்பரப்பு தொழில் முயற்சியொன்றுக்கு அல்லது உரிமம்பெற்ற தொழில்முயற்சியொன்றுக்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

**கைத்தொழில் இடப்பரப்பு.**

21. (1) அமைச்சர், மாகாணமொன்றின் பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், மாகாணத்தினுள் ஏதேனும் இடப்பரப்பை "கைத்தொழில் இடப்பரப்பு" ஒன்றாக வெளிப்படுத்தலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய இடப்பரப்பு 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றினுள் அமையுமிடத்து, நகர அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தவிர, அமைச்சரினால் வெளிப்படுத்துகை எதுவும் இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்படுதலாகாது.

(2) அத்தகைய கைத்தொழில் இடப்பரப்பு அமைந்துள்ள பிராந்தியத்துக்கு 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பிராந்திய கைத்தொழில் சேவைக்குழு, அத்தகைய கைத்தொழில் இடப்பரப்பினுள் கைத்தொழில்களுக்கான உள்ளமைப்பை வழங்குவதற்கான திட்டங்களையும், செயற்றிட்டங்களையும், அத்துடன் அத்தகைய கைத்தொழில் இடப்பரப்பினுள் சேவைகளினதும், வசதிகளினதும் ஒருங்கிணைப்பையும் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) அமைச்சர், ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றவாறான அத்தகைய எவையேனும் திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் அங்கீகரிக்கலாம்.

(4) ஒரு கைத்தொழில் இடப்பாப்புத் தொடர்பில் 3 ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு திட்டம் அல்லது செயற்றிட்டம் அங்கீகரிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய கைத்தொழில் இடப்பரப்பு அமைந்துள்ள பிராந்தியத்துக்கென நியமிக்கப்படும் பிராந்திய கைத்தொழில் சேவைக்குழு அத்தகைய திட்டத்தை அல்லது செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பானதாகவிருத்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன், அத்தகைய ஏதேனும் திட்டத்துக்கு அல்லது செயற்றிட்டத்திற்கு அவசியமானவாறான ஏதேனும் கட்டிடம் அல்லது கட்டமைவு எந்த நியமனங்களுக்கு இணங்கக் கட்டியெழுப்பப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும் எனக் குறித்துரைத்தல் வேண்டும்.

(6) அத்தகைய திட்டம் அல்லது செயற்றிட்டம், நடைமுறைப்படுத்தப் படவுள்ள இடப்பரப்பில் கட்டிடங்களைக் கட்டியெழுப்புவதற்கு அல்லது மாற்றியமைப்பதற்கு அங்கீகாரம் வழங்க ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரசபை, ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், (5) ஆம் உட்பிரிவின் கீழ் விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்க அது இருப்பின், அவ்வாறு கட்டியெழுப்புதலுக்கு அல்லது மாற்றியமைத்தலுக்கு அங்கீகாரம் வழங்குதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அங்கீகாரம், அதற்கான விண்ணப்பம் செய்யப்படும் தேதியிலிருந்து எட்டு வாரங்களுக்குள் வழங்கப்படுதலும் வேண்டும்.

(7) அத்தகைய ஏதேனும் திட்டத்தின் அல்லது செயற்றிட்டத்தின் நோக்கங்களுக்காக கைத்தொழில் இடப்பரப்பொன்றில் ஏதேனும் கட்டிடத்தைக் கட்டியெழுப்புவதற்கான அல்லது மாற்றியமைப்பதற்கான விண்ணப்பம் ஒன்று அத்தகைய அங்கீகாரத்தை வழங்க எழுத்திலான சட்டத்தின் மூலம் தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரசபைக்குச் செய்யப்பட்டு, அத்தகைய அதிகாரசபை அத்தகைய அங்கீகாரத்தை அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்ட எட்டு வாரங்களுக்குள் வழங்கத் தவறுமிடத்து, அத்தகைய கைத்தொழில் இடப்பரப்பு அமைந்துள்ள பிராந்தியத்துக்கு நியமிக்கப்பட்ட பிராந்திய கைத்தொழில் சேவைக் குழு, அத்தகைய எழுத்திலான சட்டத்தில் அத்தகைய அங்கீகாரத்தை வழங்கத் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரசபை, அலுவலர் அல்லது ஆள் பற்றிய குறிப்பீடுகள், அத்தகைய குழு பற்றிய குறிப்பீடு ஒன்று என்றுற்போன்ற அதே முறையில் அத்தகைய அங்கீகாரத்தை வழங்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*குறித்த சில இடப்பரப்புக்களில் கைத்தொழில் கட்டடங்களைக் கட்டியெழுப்ப ஆணைக்குழு அங்கீகாரம் வழங்குதல்.*

22. (1) நியமித்த தேதியன்று தொடங்கி, 1994 திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, கட்டிடம் எதுவும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு ஒத்தியையவிருந்தாலன்றி, கைத்தொழில் பொறுப்புமுயற்சியொன்றின் நோக்கங்களுக்காகக் கட்டியெழுப்பப்படுதலோ, பயன்படுத்தப்படுதலோ ஆகாது.

(2) அத்தகைய கட்டியெழுப்பலை அல்லது பயன்படுத்தலை அங்கீகரிப்பதற்கு எழுத்திலான சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரசபை வேறேதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், அத்தகைய கட்டியெழுப்பல் அல்லது பயன்பாடு விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு ஒத்தியைபவிருந்தால் அதனை அங்கீகரித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவில் உள்ள எதுவும்—

(அ) 1979 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மாகொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான ஏதேனும் இடப்பரப்பு தொழில் முயற்சியினால் அல்லது உரிமம்பெற்ற தொழில் முயற்சியினால் ;

(ஆ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாத இடப்பரப்பொன்று எனக் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தலின் மூலம் சனாதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வேறேதேனும் இடப்பரப்பில் ;

(இ) 19 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்படும் ஏதேனும் கைத்தொழில் பெருந்தோட்டத்தில், கைத்தொழில் பூங்காவில், அறிவியற் பூங்காவில் அல்லது கைத்தொழில் உள்ளமைப்பில் ; அத்துடன்

(ஈ) 21 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் கைத்தொழில் இடப்பரப்பில்,

கட்டியெழுப்பப்படும் அல்லது பயன்படுத்தப்படும் கட்டிடங்களுக்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

நியாய வியாபார ஆணைக்குழு கைத்தொழில் வினை பொருட்களுக்கான விலைமட்டங்களைப் பேணுதல்.

23. (இதனகத்துப்பின்னர் "நியாய வியாபார ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நியாய வியாபார ஆணைக்குழுவானது ஏதேனும் பொருளின் விலையை மீளாய்வு செய்யலாம் என்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக விசாரணையொன்றையும் நடாத்தலாம். அத்தகைய ஏதேனும் விசாரணையின் பின்னர் அத்தகைய பொருளின் விலை நியாயமற்றதெனவும், அத்தகைய பொருட்களின் இறக்குமதியை அனுமதிப்பதன் மூலம் போட்டிநிலையை ஊக்குவிப்பது அவசியமாகும் எனவும் நியாய வியாபார ஆணைக்குழு தீர்மானித்தால், நியாய வியாபார ஆணைக்குழு, வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அறிக்கையானது, அத்தகைய பொருட்களின் இறக்குமதி மீது அறவிடப்படவேண்டிய சுங்க இறுப்பு வரி எதுவுமிருப்பின், அதனையும் விதந்துரைத்தல் வேண்டும்.

இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ச் சட்டத்தின் கீழ் விலக்களிப்பு.

24. கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் வியாபார, வர்த்தகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வினைபொருட்கள் தவிர்ந்த எல்லா வினைபொருட்களும், 1991 யூலை 1 ஆம் தேதியிலிருந்து, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ச் சட்டத்தின் 4 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### பொது

*பொது மக்கள் நலனுக்கு உகந்தவையென வெளிப்படுத்தப்படும் கைத்தொழில்கள்.*

25. (1) இச்சட்டத்துக்கான ஓராம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் கைத்தொழில்களை இலங்கை அரசாங்கம் கட்டுப்படுத்துவது பொது மக்கள் நலனுக்கு உகந்ததென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

(2) பாராளுமன்றம், தீர்மானம் மூலம், இச்சட்டத்திற்கான ஓராம் அட்டவணையைத் திருத்தலாம்.

*இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு உரிமமளித்தல்.*

26. (1) ஆள் எவரும், ஓராம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் ஒன்றுகவுள்ளதும் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதுமான கைத்தொழில் ஒன்றை, அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினுல் அதற்கென வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் கீழன்றியும், அதன் நிபந்தனைகளுக்கு இணங்கவல்லாதும், கொண்டு நடாத்துதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமம் ஒன்றுக்கு விண்ணப்பிக்கும் முறையும், அத்தகைய உரிமத்தை வழங்க மறுப்பதற்கெதிரான மேன்முறையீடுகளும், விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வோர் உரிமமும், இச்சட்டத்திற்கான மூன்றும் அட்டவணையில் தரப்பட்டுள்ள நியதி, நிபந்தனைகளுக்கு அமைவானதாகவிருத்தல் வேண்டும்.

(4) ஆளொருவர், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கைத்தொழில் ஒன்றை, அவ்வுட்பிரிவின் கீழ் அதற்கென வழங்கப்படும் உரிமமொன்றின்றிக் கொண்டு நடாத்துமிடத்து பதிவாளர், அத்தகைய தொழிலை அத்தகைய ஆள் கொண்டுநடாத்தாது தடைசெய்யும் கட்டளையொன்றுக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(5) அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழிலானது, அதனைக் கொண்டுநடாத்துவதற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமமொன்று தேவைப்படும் கைத்தொழில் ஒன்று என்றும், அத்துடன் அவ்வுட்பிரிவின் கீழ் அது தொடர்பில் உரிமம் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் பயன்படவமைந்த பதிவாளரின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்று, (4) ஆம் உட்பிரிவின் கீழ் தொடுக்கப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றுக ஏல்தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன், அதனகத்துக் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கான முதற்றோற்றச் சான்றுகவிருத்தலும் வேண்டும்.

*அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.*

27. (1) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக கைத்தொழில் பதிவாளர் ஒருவரும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறு அத்தகைய எண்ணிக்கையினரான பிரதிக் கைத்தொழில் பதிவாளர்களும், உதவிக் கைத்தொழில் பதிவாளர்களும் பெயர் குறித்தோ பதவிகுறித்தோ நியமிக்கப்படலாம்.

(2) ஒவ்வொரு பிரதி கைத்தொழில் பதிவாளரினதும், உதவிக் கைத்தொழில் பதிவாளரினதும் நியமனமானது, அவர் எவ்விடப் பரப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைக் குறித்துரைத்தல் வேண்டும். அவ்வாறு குறித்துரைக்கப்படும் இடப்பரப்பு இதனகத்துப்பின்னர் "அவரது நியமன இடப்பரப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு பிரதிக் கைத்தொழில் பதிவாளரும், ஒவ்வோர் உதவிக் கைத்தொழில் பதிவாளரும், பதிவாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் பதிவாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும், அவரது நியமன இடப்பரப்பினுள் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகை.

28. பதிவாளரும் பிரதிப் பதிவாளரும், உதவிப் பதிவாளரும், இச்சட்டத்தின்கீழ் எவையேனும் பணிகளை நிறைவேற்றும் வேறு எவரேனும் அலுவலரும், தமது கடமைகளைச் செய்யத் தொடங்குமுன்னர், அவரது பணிகளை நிறைவேற்றுகையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய கைத்தொழிற் பொறுப்பு முயற்சியொன்று தொடர்பிலான எல்லாக் கருமங்கள் சம்பந்தமாகவும் கண்டிப்பான இரகசியத்தைக் கடைப்பிடிக்கத் தம்மைப் பிணித்துக்கொள்ளும் வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அவ்வெளிப்படுத்துகை மூலம், நீதிமன்றத்தினால் வெளிப்படுத்துமாறு தேவைப்படுத்தப்படும்போது தவிர, அத்தகைய கருமங்கள் எவற்றையும் வெளிவிடாதிருக்கத் தம்மைப் பிணித்துக்கொள்ளுதலும் வேண்டும்.

தவறுகள்.

29. (அ) 4 ஆம் பிரிவின்கீழ் அவர் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆண்டு விபரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறும்;

(ஆ) 4 ஆம் பிரிவின்கீழ் அவரால் கொடுத்துதவப்படும் ஏதேனும் ஆண்டு விபரத்திரட்டில் ஏதேனும் பொய்யான அல்லது செம்மையற்ற கூற்றைத் தெரிந்துகொண்டே செய்யும்;

(இ) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற,

ஒவ்வோர் ஆளும் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பணிப்புக்களை விடுப்பதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

30. அமைச்சர், ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதுபற்றி எழுத்திலான அத்தகைய பொதுப்பணிப்புக்களை ஆணைக்குழுவுக்கு வழங்கலாம் என்பதுடன், ஆணைக்குழு அத்தகைய பணிப்புக்களைப் பயனுறுத்துதலும் வேண்டும்.

சனாதிபதி பணிப்புகளை விடுத்தல்.

31. (1) சனாதிபதி, அமைச்சரதும் இயைபான எவரேனும் அமைச்சரதும் கலந்தாலோசனையுடன், கைத்தொழில் கொள்கையை நிறைவேற்றுவதற்குத் தடையாகவிருக்கும் நிருவாகஞ்சார் தடைகளையும், வேறு தடைகளையும் நீக்கும் நோக்கத்துக்காகவும் போட்டிமுறையான கைத்தொழில் சூழலை மேம்படுத்துவதற்காக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் பயனுறுவகையில் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காகவும், பொதுவில் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான நிறுவனஞ்சார் ஆற்றல்களையும், ஏனைய ஆற்றல்களையும் சீராக்குவதற்காகவும் ஆணைக்குழுவுக்குப் பணிப்புக்களை வழங்கலாம்.

(2) அரசாங்க நிறுவனம் எதற்கும், அதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்பு எதனையும் நடைமுறைப்படுத்துவதற்கு, ஆணைக்குழு பணிப்புரைகள் எவற்றையும் வழங்குமிடத்து, அப்பணிப்புரைகளுடன் இசைந்தொழுகுவது, அந்நிறுவனத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்குக் கடமையாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சனாதிபதியினால் அதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்பற்றி சனாதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை அமைச்சருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தின் 18 முதல் 26 வரையான பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

32. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தின் 18 முதல் 26 வரையிலான பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

" விலைக்கட்டுப்பாட்டாளர் குறித்துரைக்கப்பட்ட பொருட்களின் விலைகளை நிர்ணயிக்குமாறு ஆணைக்குழுவை வேண்டலாம்.

18. (1) இப்பிரிவில் "குறித்துரைக்கப்பட்ட பொருள்" என்பது ஏதேனும் உணவுப்பொருள் அல்லது ஏதேனும் மருந்தாக்கல் உற்பத்திப்பொருள் எனப் பொருளாகும்.

(2) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொருளின் விலையில் நியாயமற்ற அதிகரிப்பு எதுவும் உள்ளதென அல்லது எழும் சாத்தியம் உள்ளதென அல்லது அது விற்பனைக்கெடுக்கப்படும் விலை மிகையாகவுள்ளதென விலைக்கட்டுப்பாட்டாளருக்குத் தோன்றினால், அவர் ஆணைக்குழுவை, ஒன்றில்—

(அ) அத்தகைய பொருள் எந்த ஆகக்கூடிய சில்லறை விலைக்கு மேல் விற்கப்படலாகாதோ அந்த ஆகக்கூடிய சில்லறை விலையை நிர்ணயிக்குமாறு அல்லது அத்தகைய ஆகக்கூடிய விலையமைப்பு எவ்விலையமைப்புக்கு இணங்க நிர்ணயிக்கப்படவேண்டுமோ அந்த விலையமைப்பைத் தருமாறு; அல்லது

(ஆ) அத்தகைய பொருள் எந்த ஆகக்கூடிய விலைக்கு விற்கப்படுதலாகாதோ அந்த ஆகக்கூடிய விலையை நிர்ணயிப்பதாக அல்லது, அத்தகைய ஆகக்கூடிய விலை எந்த விலையமைப்புக்கு இணங்க நிர்ணயிக்கப்படலாமோ அந்த விலையமைப்பை எடுத்துக்கூறுவதாக அப்போதைக்கு வலுவிலுள்ளதும் இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழானதுமான கட்டளையொன்று குறித்துரைக்கப்பட்ட பொருளின் தொடர்பில் இருக்கின்றவிடயத்தில், அத்தகைய கட்டளைமூலம் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையை அல்லது விலையமைப்பை வேறுபடுத்துமாறு,

வேண்டலாம்

(3) இயைபான முகவர் நிலையமொன்று, எக்குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒன்று தொடர்பில் (4) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று அப்போதைக்கு வலுவிலிருக்கின்றதோ, அக்குறித்துரைக்கப்பட்ட பொருள் தொடர்பில், அத்தகைய கட்டளையினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை அல்லது விலையமைப்பை மாற்றியமைக்குமாறு ஆணைக்குழுவை வேண்டலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வேண்டுகோளொன்றைப் பரிசீலித்தபின்னர், அத்தகைய வேண்டுகோள் நியாயமானதென ஆணைக்குழு திருப்தியடைந்தால், அது—

(அ) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்ச் செய்யப்பட்ட வேண்டுகோள் ஒன்றின் விடயத்தில், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய வேண்டுகோளில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட பொருட்கள் எந்த ஆகக்கூடிய அல்லது சில்லறை விலைக்கு மேல் விற்கப்படலாகாதோ அந்த ஆகக்கூடிய விலையை அல்லது சில்லறை விலையை நிர்ணயித்தல் வேண்டும் அல்லது அத்தகைய ஆகக்கூடிய விலைகள் எந்த விலையமைப்புக்கு இணங்க நிர்ணயிக்கப்படுதல் வேண்டுமோ அந்த விலையமைப்பை எடுத்துக்கூறுதல் வேண்டும்; அல்லது

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்படும் வேண்டுகோள் ஒன்றின் விடயத்தில், அத்தகைய வேண்டுகோளில் குறிப்பீடுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பொருட்கள் எந்த ஆகக்கூடிய சில்லறை விலைக்கு மேல் விற்கப்படலாகாதோ அந்த ஆகக்கூடிய சில்லறை விலையை நிர்ணயிப்பதான அல்லது அத்தகைய ஆகக்கூடிய விலைகள் எந்த விலையமைப்புக்கு இணங்க நிர்ணயிக்கப்படவேண்டுமோ அந்த விலையமைப்பைத் தருவதான கட்டளையை வேறுபடுத்தலாம்.

இவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும், அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) அமைச்சர் (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை ஒழிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(6) அமைச்சரினால் (5) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஒழிக்கப்படுகின்றவிடத்து அல்லது வேறுபடுத்தப்படுகின்றவிடத்து அத்தகைய ஒழித்தல் அல்லது வேறுபடுத்தல்பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் செய்யப்பட்ட அல்லது உறப்பட்ட எதற்கும், அல்லது அதன் கீழ் கொள்ளப்பட்ட, திரண்ட, உறப்பட்ட ஏதேனும் உரிமைக்கு, கடப்பாட்டுக்கு, அல்லது பொறுப்புக்குப் பங்கமின்றி விடயத்திற்கேற்ப, ஒழிக்கப்பட்டதாக, அல்லது வேறுபடுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

செயலுக்குப் பாதுகாப்பு.

33. (1) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரால், போவையின் உறுப்பினர் ஒருவரால், அல்லது பிராந்தியக் கைத்தொழில் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரால் அல்லது பதிவாளரால், பிரதிப் பதிவாளரால் அல்லது உதவிப் பதிவாளரால் அல்லது இச்சட்டத்தின் கீழான ஏதேனும் பணியைப் புரிகின்ற வேறு எவரேனும் அலுவலரினால் இச்சட்டத்தின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்கும், அத்தகைய உறுப்பினருக்கு, பதிவாளருக்கு, பிரதிப் பதிவாளருக்கு உதவிப் பதிவாளருக்கு அல்லது வேறு அலுவலருக்கு எதிராக துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு எதிராக, இச்சட்டத்தின்கீழ் அவரால் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது.

34. (1) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அது வெளியிடப்படும் தேதியன்று அல்லது அதனகத்துக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவில், அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

35. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை காணப்படும் விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை காணப்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

(பிரிவு 25)

(1) வெளிநாட்டு முதலீட்டுடனான ஏதேனும் கைத்தொழில்.

(2) உயர் தொழினுட்பத்தைக்கொண்ட ஏதேனும் கைத்தொழில்.

(3) இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்வதற்கு பண்டங்களை உற்பத்திசெய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(4) கனிப்பொருட்களை அல்லது மீளப் புதுப்பிக்கப்படற்பாலனவல்லாத மூல வளங்களை வெளிக்கொணரும், பிரித்தெடுக்கும், அல்லது பதப்படுத்தும், ஏதேனும் கைத்தொழில்.

(5) ஆயுதங்களையும், சுடுபடைக்கலங்களையும், வெடிப் பொருட்களையும், இராணுவ வாகனங்களையும், உபகரணத்தையும், வானூர்தியையும், வேறு ஏதேனும் இராணுவ ஆயுதங்களையும் எந்திரங்களையும் உற்பத்திசெய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(6) நஞ்சுகளை, போதைப் பொருட்களை, மதுசாரம், அபாயகரமான அவுட்தங்களையும், அதனுடன் நச்சுத்தன்மையான தீங்குவிளைவிப்பதான, புற்றுநோய் விளைவிப்பதான பொருட்களை உற்பத்திசெய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(7) நாணயத்தாள்களையும், நாணயக் குற்றிகளையும், பிணைய ஆவணங்களையும் உற்பத்திசெய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(8) கைத்தொழில் எதிலும்—

(அ) பொறித்தொகுதியில் அத்துடன் உபகரணத்தில் மூலதன முதலீட்டின் பெறுமதியானது நாற்பது இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, அத்துடன்

(ஆ) அத்தகைய கைத்தொழில் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை ஐம்பதை விஞ்சுகின்றவிடத்து.

(9) அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கம் பெரும்பான்மைப் பங்குகள் வைத்திருக்கும் கம்பெனியொன்றினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் ஏதேனும் கைத்தொழில்.

## இரண்டாம் அட்டவணை

(பிரிவு 26)

(1) ஆயுதங்களையும், சுடுபடைக்கலங்களையும், வெடிப் பொருட்களையும், இராணுவ வாகனங்களையும், உபகரணத்தையும், வானூர்தியையும், வேறேதேனும் இராணுவ ஆயுதங்களையும் எந்திரங்களையும் உற்பத்திசெய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(2) நஞ்சுகளை, போதைப் பொருட்களை, மதுசாரத்தை, அபாயகரமான அவுடதங்களை, அத்துடன் நச்சுத்தன்மையான தீங்குவிளைப்பதான, புற்று நோய் விளைப்பதான பொருட்களை உற்பத்திசெய்யும் ஏதேனும் கைத்தொழில்.

(3) நாணயத்தாள்களையும், நாணயக் குற்றிகளையும், பிணைய ஆவணங்களையும் உற்பத்திசெய்யும் ஏதேனும் கைத்தொழில்.

## மூன்றாம் அட்டவணை

(பிரிவு 26)

(1) ஏதேனும் அத்தகைய கைத்தொழிலில் பேணப்படவேண்டிய பாதுகாப்பு நிலைமையின் தராதரம்.

(2) உற்பத்தி ஆக்கப்பொருள்களைக் களஞ்சியப்படுத்துதல், உற்பத்தி ஆக்கப் பொருள்களின் பாவனை, பாவனைசெய்யப்படாத உற்பத்தி ஆக்கப் பொருள்களையும் கழிவுப் பொருள்களையும் தள்ளிக் கழிக்கப்பட்ட பொருள்களையும் கையுதிர்த்தல் என்பன உட்பட, ஏதேனும் அத்தகைய கைத்தொழிலினால் எடுக்கப்படவேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள்.

(3) கைத்தொழிலின் உற்பத்திப் பொருட்கள் வாடிக்கையாளர்களுக்கு ஒப்படைக்கப்படவேண்டிய முறை.

(4) பேணப்படவேண்டிய சுகாதார நிலைமையின் தராதரம்.

(5) ஏதேனும் அத்தகைய கைத்தொழிலினால் பயன்படுத்தப்படவேண்டிய உற்பத்தி ஆக்கப்பொருட்கள்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலு வலகம், கொழும்பு 1' என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*